## **கோயம்புத்தூர் மாநகராட்சி**

| **அனுப்புநர்** | **பெறுநர்** |
|---|---|
| **திரு.ப. ராஜ்குமார் , MA., LLB., Phd.,**<br>**மாண்புமிகு மேயர்**<br>**கோயம்புத்தூர் மாநகராட்சி** | மரியாதைக்குரிய துணை மேயர்,<br>நிலைக்குழு தலைவர்கள்,<br>நியமனக்குழு உறுப்பினர்,<br>வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்<br>அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,<br>கோயம்புத்தூர் மாநகராட்சி.<br><br>அனைத்து துறைத் தலைமைகள்,<br>மண்டல உதவி ஆணையாளர்கள்,<br>கோயம்புத்தூர் மாநகராட்சி.<br><br>மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதி மன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்,<br>(தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி)<br><br>பாராளுமன்ற உறுப்பினர்கள்<br>(கோயம்புத்தூர், மற்றும் பொள்ளாச்சி பாராளுமன்றத் தொகுதிகள்)<br><br>சட்டமன்ற உறுப்பினர்கள்<br>(சிங்காநல்லூர், கோவை தெற்கு, கோவை வடக்கு, கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிகள்) |

**ந.க.எண் : 854 /2015 / எம்சி. 8 நாள் : 11.02.2015**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்ற சிறப்புக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சிறப்புக் கூட்டம் **16.02.2015 திங்கள்கிழமை காலை 10.15 மணிக்கு** மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்துத்துறை தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) ப. ராஜ்குமார்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**/ உண்மை நகல் /**

**மாமன்ற செயலாளர்**

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

# <u>கோயம்புத்தூர் மாநகராட்சி</u>

**அனுப்புநர்**

**திரு.ப. ராஜ்குமார் , MA., LLB., Phd.,**
**மாண்புமிகு மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**பெறுநர்**

மரியாதைக்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து துறைத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக
வளர்ச்சி, சட்டம், நீதி மன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்,
(தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி)

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோயம்புத்தூர், மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, கவுண்டம்பாளையம்,
கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிகள்)

<u>**ந.க.எண் : 854 /2015 / எம்சி. 8 நாள் : 11.02.2015**</u>

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்ற சிறப்புக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சிறப்புக் கூட்டம் **16.02.2015 திங்கள்கிழமை காலை 10.15 மணிக்கு** மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்துத்துறை தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**ப. ராஜ்குமார்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சிறப்புக் கூட்டம் - பிப்ரவரி 2015

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | | 1 |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** | |
| **1** | பொறியியல் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி – ஜெர்மனி நாட்டின் எஸ்லிங்கன் ஆம் நெக்கார் நகரத்தின் மேயர் மற்றும் குழுவினர் வருகை புரிதல் - இரு நகரங்களுக்கிடையே உறவை மேம்படுத்துதல்– சுகாதாரம், கல்வி, கலாச்சாரம், சமூக சேவை மற்றும் உள்ளாட்சிப் பணிகள் குறித்து கலந்தாய்வு செய்து அரசின் அனுமதி பெற்று முடிவுகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி பெறுதல் - தொடர்பாக | **2** |

**நன்றியுரை**

அ) **திருக்குறள்**

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லாது நாடு

**(குறள் - 735)**

**விளக்கம்**

மக்கள் சமுதாயம் பல குழுக்களாகப் பிரியாது ஒற்றுமையானதும், கேடுசெய்யும் வஞ்சகர்கள் இல்லாததும், வன்முறைகளால் பொல்லாங்கு செய்து ஆட்சியை அலைக்கழிப்போர் ஒடுங்கியதுமாக அமைதியைக் காத்துச் செழிக்கும் நாடே சிறப்பானது.

**திருவள்ளுவர்**

---

ஆ) **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**பொருள் எண் 1**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – ஜெர்மனி நாட்டின் எஸ்லிங்கன் ஆம் நெக்கார் நகரத்தின் மேயர் மற்றும் குழுவினர் வருகை – இரு நகரங்களுக்கிடையே உறவை மேம்படுத்துதல் நோக்கிலான ஆலோசனை தொடர்பான சிறப்புக் கூட்டம் – தொடர்பு

பார்வை: மாமன்றத் தீர்மான எண் 293 நாள்.19.12.2014

*************

பார்வையில் காண் மாமன்றத் தீர்மானத்தின்படி, ஜெர்மனி நாட்டின் எஸ்லிங்கன் ஆம் நெக்கார் நகரத்தின் மேயர் மற்றும் குழுவினர் பிப்ரவரி 2015ல் இம்மாநகராட்சிக்கு வருகை தந்து இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் சிறப்பு திட்டங்கள் குறித்து ஆலோசனைகளையும் இரு நகரங்களையும் வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல எந்தெந்த துறைகளில் இணைந்து செயல்பட முடியும் என்பது குறித்து ஆய்ந்து முடிவு செய்யவும், நமது மாநகரத்தினுடைய கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தினை அறிந்து கொள்ளும் நோக்கிலும் வருகை புரிய உள்ளனர். இதன் விளைவாக இரு நகரங்களுக்கிடையே பரஸ்பர பல்துறை வளர்ச்சிகள் ஏற்பட அனுகூலமாகும். மேலும் இரு நகரங்களுக்கிடையே சுகாதாரம், கல்வி, கலாச்சாரம், சமூக சேவை மற்றும் உள்ளாட்சிப் பணிகள் குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி செயல்பட ஏதுவாக அமையும்.

எனவே, இரண்டு மாநகர மேயர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் மேற்காண் பொருட்கள் குறித்து கலந்தாய்வு செய்து அதன்பின் அரசின் உரிய அனுமதி பெற்று முடிவுகள் மேற்கொள்ள மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.9327/2014/எம்டி2

---

**(ஒப்பம்) ப. ராஜ்குமார்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**